# பணியாளர்களுக்கான தகவல் பாதுகாப்பு அறிக்கை

இந்த பணியாளர்களுக்கான தகவல் பாதுகாப்பு அறிக்கையானது, WSIB நிறுவனத்தால் உங்களைப் பற்றி சேகரிக்கப்படுகின்ற தகவல்களை விளக்குகிறது.

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களின் தகவல் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத்தைப் பாதுகாப்பதற்கு நாங்கள் உறுதியேற்றுள்ளோம். பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சட்டத்தை நிர்வகித்து நடைமுறைப்படுத்துவதற்காக WSIB உங்களுடைய தகவல்களைச் சேகரிக்கின்றது. மேலும், இது தகவல் பாதுகாப்புச் சட்டத்தின் தகவல் மற்றும் பாதுகாப்புச் சுதந்திரத்திற்கு உட்பட்டதாகும்.

## உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல்

பின்வரும் நோக்கங்களுக்காக உங்களிடமிருந்து மற்றும் உங்கள் முதலாளி, உங்கள் உடல்நலப் பராமரிப்பாளர் மற்றும் பணி மீள்ஒருங்கிணைப்புச் சேவை வழங்குநர்கள் மற்றும் பிறரிடமிருந்து பல்வேறு வழிகளின் வாயிலாக உங்களைப் பற்றிய தகவல்கள் நேரடியாகச் சேகரிக்கப்படும்:

### நிர்வாகம்

உங்கள் பெயர், முகவரி, இல்லத் தொலைபேசி எண் மற்றும் பிறந்த தேதி போன்ற அடையாளத் தகவல்களை வழங்குமாறு உங்களைக் கேட்கிறோம். உங்களிடம் தகவல்தொடர்பு கொள்வதற்கு, கோரல்(களைச்) சரிபார்ப்பதற்காக பதிவுகளை ஒப்பு நோக்குவதற்கு மற்றும் நன்மை வழங்குத்தொகை(களை) வழங்குவதற்கு உள்பட உங்கள் கோரல்(களை) நிர்வகிப்பதற்கு இத்தகவல்கள் தேவைப்படுகின்றன. உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்கின்ற தொலைபேசி அழைப்புகள் தர உறுதிபடுத்தல் நோக்கங்களுக்காக பதிவுசெய்யப்படலாம் என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள்.

ஒரு கோரல் பதிவுசெய்யப்படும் போது, உங்களை அடையாளம் அறிவதற்கும், கனடா வருவாய் முகமை (CRA) மற்றும் வருமான வரிச் சட்டம் (ITA) ஆகியவற்றுக்குத் தேவைப்படும் வருமான வரித் தகவல்களை அளிப்பதற்கும் உங்களுடைய சமூகக் காப்பீட்டு எண் சேகரிக்கப்படும். ITA-வின்கீழ் மற்றும் CRA உடனான ஒப்பந்தத்தின்படி, அடையாளம் மற்றும் கனடா ஓய்வூதியத் திட்டம் (CPP), உடற்குறை போன்ற வருமானம்/நன்மைத் தகவல்கள் WSIA-ஐ நிர்வகித்து நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக சரிபார்க்கப்படலாம்.

### நிதி

உங்களுடைய வாராந்தர, மாதாந்தர மற்றும் வருடாந்தர வருமானம் போன்ற தகவல்கள், உங்களுடைய ஊதிய இழப்பு நன்மைகளின் விகிதத்தைத் தீர்மானிப்பதற்கு எங்களை அனுமதிக்கின்றன. மேலும் இவை உங்களுடைய முதலாளி அல்லது ஊதியம் வழங்குநரால் உறுதிசெய்யப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இரட்டிப்பு வழங்குத்தொகைகள் மற்றும்/அல்லது நன்மை-சார்ந்த கடன்களைத் தவிர்ப்பதற்கு, சமூக உதவி, வேலைவாய்ப்புக் காப்பீடு மற்றும் தனியார் காப்பீடு போன்ற வருமானப் பதிலீட்டின் ஆதாரங்களை WSIB-க்குத் தகவல் தெரிவிப்பதற்குத்

தேவைப்படலாம். நேரடி வைப்பு ஒரு விருப்பத்தேர்வாக இருந்தால் அல்லது தேவைப்பட்டால், உங்கள் வங்கிக் கணக்கு எண் கோரப்படலாம்.

### மருத்துவம்

உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் உடல்நல நிபுணரின் அறிக்கைகள், பரிந்துரைக்கப்பட்ட மருந்துத் தகவல்கள், உடலியக்கச் சிகிச்சை தேதிகள், மருத்துவமனைப் பதிவுகள் மற்றும் பிற சிகிச்சைப் பதிவுகள் ஆகிய தகவல்கள் நன்மைகளுக்கான உங்கள் தகுதிநிலையைத் தீர்மானிப்பதற்கு எங்களுக்கு உதவ சேகரிக்கப்படுகின்றன. நீங்கள் தரமான உடல்நலப் பராமரிப்பைப் பெறுவதை உறுதிசெய்வதற்கு உங்களுக்கு அல்லது உங்களுடைய உடல்நலப் பராமரிப்பாளருக்குத் தேவைப்படக்கூடிய கூடுதல் உதவியை வழங்குவதற்கும் கூட இது உதவும். ஒப்புதலின்றி உங்கள் கோரலுக்குத் தொடர்புடைய உடல்நலத் தகவல்களை சிகிச்சையளிக்கின்ற உடல்நல நிபுணர்கள் WSIB-க்கு வழங்க வேண்டியது அவசியம் என்று பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 37 கூறுகிறது.

### மோசடி மற்றும் இணங்காமை

மோசடி அல்லது இணங்காமைக்காக குற்றச் செயல் அல்லது மற்ற ஆய்வு நடவடிக்கைகளில் நிர்வாகம், நிதிசார் மற்றும் மருத்துவத் தகவல்கள் சேகரிக்கப்படலாம்.

## உங்களுடைய தகவல்களைப் பயன்படுத்துதல், தக்கவைத்துக் கொள்ளுதல் மற்றும் வெளிப்படுத்துதல்

### நன்மைகளை நிர்வகித்தல்

ஓர் முடிவுசெய்யும் கடிதம் அளிக்கப்படுகின்ற அல்லது பொருளாதார அல்லாத இழப்பு (NEL) மருத்துவ மதிப்பீடு அல்லது உங்களாலோ அல்லது உங்கள் முதலாளியாலோ செய்யப்படும் ஒரு WSIB முடிவின் மீதான மேல்முறையீடு போன்ற நேரங்களில், உங்களுடைய கோரலுக்குத் தொடர்புடைய தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் உள்ளிட்ட அந்தரங்கத் தகவல்கள் உங்களுடைய ஒப்புதலின்றி உங்கள் முதலாளியிடம் வெளிப்படுத்தப்படலாம். இது பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சட்டம் மற்றும் தகவல் பாதுகாப்புச் சட்டத்தின் தகவல் மற்றும் பாதுகாப்புச் சுதந்திரத்துடன் இணங்கி மேற்கொள்ளப்படும்.

உங்கள் கோரல் மீது பணியாற்றுகின்ற WSIB ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட வழங்குநர்கள் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கு அனுமதி பெற்றுள்ளனர். அனைத்துக் கோரல்களின் கோப்புத் தகவல்களும் இரகசியமானதெனக் கருதப்படும். மேலும், உங்கள் தகவல்களை அறிந்துகொள்வதற்கான தேவையிருக்கும் போது மட்டுமே அவற்றை அணுக அனுமதிக்கப்படும்.

இன்றுள்ள பல பொது மற்றும் தனியார் நிறுவனங்களைப் போலவே, வெளி நிறுவனங்களின் சேவைகளை WSIB-யும் பயன்படுத்துகிறது. உதாரணத்திற்கு, ஒரு பரிந்துரைக்கான உங்கள் கோரலின் வழங்குத்தொகையை ஒரு வெளிச் சேவைவழங்குநர் செயற்படுத்துவார் அல்லது கட்டண மீட்பு நோக்கங்களுக்காக உங்கள் கோரல் ஒரு மூன்றாம் தரப்பிடம்

வெளிப்படுத்தப்படலாம். அத்தகைய சூழ்நிலைகளில், உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கு ஒப்பந்த அடிப்படையிலான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உங்கள் தகவல்கள் காகிதம் அல்லது மின்னணு வடிவில் சேமிக்கப்படும், மேலும் அவை ஒரு வெளிநாட்டு அதிகார எல்லையில் இடம்பெற்றிருக்கலாம். அத்தகைய நிகழ்வுகளில், அந்நாடுகளின் சட்டங்களுக்கு உட்பட்டு, அந்நாடுகளில் உள்ள அரசாங்க ஆணையங்கள், நீதிமன்றங்கள் அல்லது சட்ட அமுலாக்கங்களின் செல்லத்தக்க கோரல்கள் அல்லது வேண்டுகோள்களை ஏற்று உங்கள் தகவல்கள் வெளிப்படுத்தப்படலாம்.

## பணிக்குத் திரும்புதல் மற்றும் நலம் பெறுதல்

நீங்கள் நன்மைகளுக்காக ஒரு கோரலைச் செய்யும் போது, உங்களுடைய செயல்பாடு சார்ந்த திறன்களின் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நீங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டியது கட்டாயமாகும். உங்களுடைய செயல்பாடு சார்ந்த திறன்கள் குறித்த தகவல்களை நேரடியாக உங்கள் முதலாளியிடம் வெளிப்படுத்துவதற்கு இந்த ஒப்புதல் உங்களுடைய உடல்நலப் பராமரிப்பாளரை அனுமதிக்கிறது.

இதன் நகல் ஒன்று WSIB-க்கு வழங்கப்படும். இது நீங்கள் பணிக்குத் திரும்புவதற்கும், நலம் பெறுவதற்கும் வசதியேறுபடுத்திக் கொடுப்பதற்கு உதவும்.

உங்களுக்குப் பொருத்தமான மருத்துவ மற்றும் பணி மீள்ஒருங்கிணைப்பு வள ஆதாரங்கள் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்வதற்கு, உங்களுக்குச் சிகிச்சையளிக்கின்ற உடல்நலப் பராமரிப்பாளர்களுக்கும் பணி மீள்ஒருங்கிணைப்புச் சேவை வழங்குநர்களுக்கும் உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படலாம். இடமாற்றம் செய்யத்தக்க திறன்கள், பணி நிலைமாற்ற மதிப்பீடுகள் மற்றும் பணி நிலைமாற்றத் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உங்களுடைய காயம் தொடர்பான முதலாளி அல்லது பணியமர்த்திய முதலாளியிடம் பகிர்ந்துகொள்ளப்படலாம்.

## ஆராய்ச்சி மற்றும் தடுப்பு நடவடிக்கை

மேலும் அதிக ஆற்றல் வாய்ந்த தடுப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு, பணியிடக் காயங்கள் மற்றும் சுகவீனங்களின் இயல்பு மற்றும் காரணங்கள் குறித்த ஆராய்ச்சிக்கு WSIB உதவுகிறது. தகவல் பாதுகாப்புச் சட்டத்தின் தகவல் மற்றும் பாதுகாப்புச் சுதந்திரத்திற்கு இணங்க, WSIB தனது நிர்வாகத் தரவுத்தளங்களை பாதுகாப்பு முகமைகள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மற்றவர்களுக்குத் தேவைக்கேற்ப கிடைக்கப்பெறச் செய்யலாம்.

பணியிடக் காயம் மற்றும் சுகவீனம் மற்றும் நம்முடைய தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஆகியவை குறித்த கருத்தாய்வுகளை மேற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பு ஆராய்ச்சியாளர்களை WSIB தொடர்புகொள்ளலாம். அத்தகைய மூன்றாம் தரப்பு ஆராய்ச்சியாளர்களுக்கு உங்களுடைய பெயர் மற்றும் தொலைபேசி எண் வெளிப்படுத்தப்படலாம். இதன் மூலம், அத்தகைய ஒரு கருத்தாய்வில் பங்கெடுப்பதற்காக உங்கள் அனுமதியை பெறுவதற்கு அவர்களால் உங்களைத் தொடர்புகொள்ள இயலும்.

## அமுலாக்கம்

பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராகப் பாதுகாப்பதன் பொருட்டு, மோசடி அல்லது இணங்காமையின் விசாரணையின்போது தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படலாம். தேவைக்கேற்பவும் சட்டப்படியான ஆமோதிப்பின்படியும், இத்தகவல்கள் பிற அரசாங்க அமைப்புகள், காவல்துறை மற்றும் நீதிமன்றங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படலாம்.

## உங்களுடைய கோரல் கோப்புத் தகவல்களைப் பெறுதல் மற்றும் திருத்துதல்

உங்கள் கோரல் கோப்பின் ஒரு நகலைப் பெறுவது மிகவும் சுலபமாகும்: உங்களுடைய முடிவெடுப்பாளருக்கு கடிதம் எழுதினால் போதுமானது. இந்த வேண்டுகோளைச் செய்வதில் உங்களுக்கு கோரல் கோப்பின் நகலுக்கான பணியாளரின் வேண்டுகோள்(149.3kb, PDF) உதவுகிறது. நீங்கள் WSIB’இன் பொது விசாரணைத் தொலைபேசி எண்ணை அழைப்பதன் மூலமும் நீங்கள் இப்படிவத்தைக் கோரி பெறலாம்.

உங்கள் கோரல் படிவத்தைப் பெறுவதில் உங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தால், நீங்கள் WSIB’இன் பொது விசாரணைத் தொலைபேசி எண்ணின் வாயிலாக வர்த்தக்ச் சேவைகளைத் தொடர்பு கொள்ளலாம்.

உங்களுடைய பதிவு தவறாக உள்ளது என்று நீங்கள் நம்பினால், உங்களுடைய முடிவெப்பாளரைத் தொடர்புகொள்வதன் மூல்ம் நீங்கள் தகவல்களைத் திருத்துவதற்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

ஒரு விவகாரத்தில் பிரச்சனை இருந்தால் - மேல்முறையீட்டுச் செயல்முறையில் பங்கேற்கும் போது, உங்கள் கோரல் கோப்பின் நகல் ஒன்றை உங்கள் முதலாளி பெறக்கூடும். உங்கள் கோரல் கோப்பின் நகல் ஒன்றை உங்கள் முதலாளி கோரும் போது, குறிப்பிட்ட உடல்நலத் தகவல்களை உங்கள் முதலாளியிடம் தெரிவிக்க மறுப்பதற்கு உங்களுக்கு 21 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும். பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சட்டத்தின்கீழ், WSIB-யிடமிருந்து பெறப்படும் தகவல்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கான இரகசியக்காப்புக் கடமையை முதலாளி மற்றும் முதலாளியின் பிரதிநிதிகள் கொண்டுள்ளனர்.

## உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை புதுப்பித்தல்

உங்கள் முகவரி அல்லது பணி நிலைமை போன்ற உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் மாறினால், உங்கள் பதிவுகளைப் புதுப்பித்துகொள்வதற்கு நீங்கள் உங்களுடைய முடிவெடுப்பாளரைத் தொடர்புகொள்ள வேண்டியது கட்டாயமாகும். நீங்கள் WSIB’இன் பொது விசாரணைத் தொலைபேசி எண்ணை அழைக்கும் போது, எங்களுடைய வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதிகளும் கூட உங்களுக்கான முகவரி மாற்றத்தைச் செய்யலாம்.

## தொடர்புத் தகவல்கள்

உங்கள் கோரல் கோப்பின் நகல் ஒன்றைப் பெறுவதற்கு, உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை புதுப்பிக்கவும் அல்லது உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், பயன்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துதல் குறித்து அதிகம் அறிந்துகொள்வதற்கு, உங்கள் முடிவெடுப்பாளரை நேரடியாகத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது அழையுங்கள்:

**WSIB பொது விசாரணை**: 416-344-1000

**கட்டணமில்லா தொலைபேசி எண்**: 1-800-387-0750

**TTY**: 1-800-387-0050

தகவல் பாதுகாப்பு தொடர்பான கவலைகள் அல்லது விவகாரங்களை **416-344-5323** என்ற தொலைபேசி எண்ணில் அல்லது மேற்கண்ட கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாக WSIB தகவல் பாதுகாப்பு அலுவலகத்திடம் நேரடியாகத் தெரிவிக்கலாம்.

நீங்கள் பின்வரும் முகவரிக்கு கடிதம் எழுதுவதன் மூலமும் WSIB-ஐத் தொடர்புகொள்ளலாம்:

Workplace Safety and Insurance Board

200 Front Street West

Toronto, Ontario

M5V 3J1

இந்த ஆவணத்தைத் திருத்துவதற்கான உரிமையை WSIB பெற்றுள்ளது.